## 68. உன் நினைவுகள் என் நினைவு அல்ல

### பல்லவி

உன் நினைவுகள் என் நினைவு அல்ல
உன் எண்ணங்கள் என் எண்ணம் அல்ல

### அனுபல்லவி

*பூமிக்கு வானம் எத்தனை உயரமோ*
*அத்தனை உயரமே உம் நினைவுகள்*
*பூமிக்கு வானம் எத்தனை தூரமோ*
*அத்தனை தூரமே உம் எண்ணங்கள்*

### சரணங்கள்

1. என் மேல் உம் கண்ணை வைத்து
   ஆலோசனை சொல்லுவீர்
   என் மேல் உம் கரம் வைத்து
   நடத்தி செல்லுவீர்

   \- பூமிக்கு

2. தாயின் கருவில் இருந்த என்னை
   பெயர்சொல்லி அழைத்தவர்
   உலக தோற்றமுன்னே
   முன்குறித்து தெரிந்தவர்

   \- பூமிக்கு

3. உமது வாயிலிருந்து
   புறப்பட்ட வார்த்தைகள்
   வெறுமையாய் உம்மிடத்தில்
   திரும்பி வருவதில்லையே

   \- பூமிக்கு